# அறநூல்கள் செப்பும் சூழலியல் சிந்தனைகள்

திரு. பெ.சீ.தேவதாஸ்,
தமிழ்த்துறை பேராசிரியர்
தூய யோவான் கல்லூரி
திருநெல்வேலி

அறநூல்கள்: சங்கம் மருவிய கால இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்.

அறநூல்களின் நோக்கம்

1. தனிமனித ஒழுக்கம் ( Individual Ethiccs)
2. சமூக ஒழுக்கம் ( Social Ethics)
3. செயல்முறை ஒழுக்கம் ( Functional Ethics)

மருத்துவப் பொருட்களை எடுக்கும்போது செடிகளுக்கு ஊறுநேரா வண்ணம் எடுத்தல் வேண்டுமென்ற ‘சூழலியல் சிந்தனை’ கொண்டவர்கள் நம் முன்னோர்கள் என்பதை ‘மரம் சா மருந்தும் கொள்ளார்’ என்ற பாடல்வரி புலப்படுத்துகின்றது.



‘நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்….’ (தொல் மரபியல். 91:1-2)




ஐம்பெரும் பூதங்கள் ஒன்றுக்குள் ஒன்று சார்ந்து இயங்குவதினால் தான் ‘உயிரின வாழ்வு’ சாத்தியமாகின்றது.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று ( குறள் 941)

உடல் செயலியக்கத்திற்கு தேவையானவை வாதம், பித்தம், கபம் என்னும் முப்பொருள்களாகும்

வாதம்

பித்தம்

கபம்

மனிதருக்கு நோய்கள் ஏற்பட காரணமாகும் ஒழுக்கக்குறைபாடுகள்

1. கொலை
2. களவு
3. காமம்
4. பொய்
5. புலால்










உருவான கருவினைக் கழித்தலும் ‘கரு’ வளர்ந்து குழந்தையானால் அக்குழந்தையினைக் கொன்றோ அல்லது அனாதையாகவோ சுற்றுப்புறங்களில் விட்டெறியும் கொடுங்செயல்கள் அன்றாடம் நிகழ்கின்றன.



# சுற்றுச்சூழல் கேட்டிற்கு காரணங்கள்

- மலம், சலம், புணர்ச்சியின் போது வெளிப்படும் சுக்கிலம், வாயில் தோன்றும் கோழை, காரல், புண்களில் தோன்றும் சீழ் போன்றவை உயிரினக் கழிவுகளாகும்
- உயிரினகழிவுகளையும் இறந்த உடல் சார்ந்த கழிவுகளையும் கண்ட இடத்தில் கொட்டுதல்
- இக்கழிவினால் உயிர்க்கொல்லி நோய்கள் ஏற்படுகின்றன.





# ஆசாரக்கோவையில் சூழலியல்

வழித்தடம், புல்நிலம், வயல்வெளி, பசுவின் சாணம், நீராதாரம், மர நிழல் போன்ற இடங்களில் எச்சிலை உமிழ்ந்தும், மலம், சலம் கழித்தும் அசுத்தம் செய்தலாகாது என்கிறது ஆசாரக்கோவை.



# இயலாதோர்க்கு ஈதல

ஆதரவற்றோர், முதுமக்கள், வலிமை குன்றியவர்கள், கண் பார்வையற்றவர்கள், முடமானவர்கள் போன்றோர்களுக்கு மனமுவந்து அன்புடன் செய்யும் உணவு, உடை சார்ந்த உதவிகளும் பஞ்சகாலத்தில் பகிர்ந்தளித்து உண்ணும் பண்பினையும் காரியாசன் விளக்கமமாக எடுத்துரைக்கிறார்





# பேரின்பம் பெற வழி

1. குடிக்க தண்ணீர் என்று கேட்டவுடனே தண்ணீர் கொடுத்து உதவுக




2. வெயிலால் துன்புறுவார்க்குத் தங்கிக் களைப்பாறச் சாவடிகள் அமைக்க



3. விருந்தினருக்கு இடம் தந்து தமக்கு ஆக்கியுள்ள உணவினையும் பகிர்ந்து உண்ணுக



4. வழிபாட்டுத் தலங்கள் உருவாக்குக



5. சாலைகளை அமைக்க



# ஏலாதியில் சூழலியல்

சுகாதாரமான குளம், பாதுகாப்பான கிணறு, வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஏதுவான இலைக்குடில்கள், தண்ணீர் பந்தல் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பவன் புகழுடன் வாழுவான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது



